RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# சங்க பரிபாடலில் உயிர்மரபுக் கூறுகள்

சு. சிவப்பிரகாஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ. சா. கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-641014.

# Evolutionary Concepts in the Sangam Text Paripadal

**S. Sivaprakash [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, India

* Corresponding Author:
sivavup@gmail.com

**ABSTRACT**

The incarnations (*avataras*) of Thirumal (Vishnu), identified by Tolkappiyar as the presiding deity of the *Mullai* landscape, are often regarded merely as mythological narratives. However, when examined from a broader perspective, these incarnations reveal profound evolutionary concepts embedded within them. *Paripadal* refers to five incarnations of Thirumal—*Kurma* (Tortoise), *Varaha* (Boar), *Narasimha* (Man-Lion), *Vamana* (Dwarf), and *Kannan* (Krishna). These incarnations appear to reflect a systematic progression that corresponds both to the classificatory principles described in the *Tolkappiyam* and to concepts associated with biological evolution. Modern biologists classify vertebrate animals into five major groups: fishes, amphibians, reptiles, birds, and mammals. The sequence of Thirumal's incarnations associated with the *Mullai* landscape closely parallels these evolutionary stages. A comparative analysis of these avataras with the biological classification of vertebrates highlights the remarkable conceptual relationship between ancient Tamil literary thought and modern evolutionary principles. This study explores the evolutionary elements embedded in *Paripadal* and demonstrates how the text reflects an insightful understanding of the progression of life through symbolic literary expression.

**Keywords:** Paripadal, Thirumal, Tolkappiyar, Evolutionary Concepts.

## முன்னுரை

தொல்காப்பியர் குறிப்பிடும் முல்லை நிலக்கடவுளான திருமாலின் அவதாரம் என்பது வெறும் புராணங்களாக எண்ணும் எண்ணத்தை மடைமாற்றம் செய்யின் அவற்றில் ஆழ்ந்துள்ள உயிர்மரபு கூறுகள் புலனாகும். கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், கண்ண அவதாரம் என திருமாலின் அவதாரங்களை ஐந்து ஆக பரிபாடல் குறிப்பிடுகிறது. இந்த அவதாரங்களின் படிநிலைகள் தொல்காப்பியர் குறிப்பிடும் வகைப்பாட்டியல் அடிப்படையிலும், உயிர்மரபியலின் தாக்கத்தோடும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தின் உயிர்மரபியல் அறிஞர்கள் முதுகுநாண் உள்ள உயிர்களை ஐந்தாக பகுப்பர். அவை மீன்கள், இருவாழ்விகள், ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என்பன ஆகும். முல்லை நிலக் கடவுளான திருமாலின் அவதாரங்கள் மேற்குறிப்பிட்ட படிநிலைகளைத் தழுவியதாகவே உள்ளது. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் உயிர்மரபியல் அறிஞர்கள் பகுத்த முதுகு நாண் உள்ள உயிரினங்களின் பகுப்பை, இத்தகு அவதாரங்களோடு ஒப்பிடின் அதன் சிறப்பை உணரலாம்.

பரிபாடலில் திருமால் எடுத்த அவதாரம் என்பது முதலில் நீரிலிருந்து துவங்குகிறது. அது பரிபாடலின் கூற்றுப்படி கூர்ம அவதாரம் (ஆமை வடிவம்) ஆக இருந்தாலும் சரி நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் குறிப்பிட்ட முதல் அவதாரமான மச்ச(மீன்) அவதாரமாக இருந்தாலும், நீரிலிருந்தே முல்லை நில இறைவனான திருமாலின் அவதாரம் துவங்குகிறது. இதிலிருந்து உயிரின துவக்கம் நீர்தான் என்ற அறிவியலின் கூற்று சங்க இலக்கியமான பரிபாடலின் வழி மெய்ப்பிக்கப்படுகிறது. மேலும் பரிபாடல் குறிப்பிடும் இரண்டாவது அவதாரமான, வராக அவதாரம் (பன்றி) வடிவத்தைப் பற்றி குறிப்பிடுகிறது.

நீரிலிருந்து உருவான உயிரினங்கள், நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய (ஆமை போன்ற) உயிரினங்களாக மரபியலில் படிநிலைமாற்றம் கொண்டு தோன்றின. பின் நிலத்தில் மட்டும் வாழக்கூடிய உயிரினங்களாக மரபியல் ரீதியாக பரிணமித்தன என்பதன் அடையாளமாகவே பன்றி அவதாரத்தைக் கருதலாம்.உயிர்மரபியலின்படி முதுகுநாண் உள்ள உயிரினங்கள் ஒன்றுடன் ஒன்று உயிரியல் அமைப்பு ரீதியாக தொடர்பு கொண்டவை என்றும், நீரிலிருந்தும், நீருக்கும் நிலத்திற்கும் இடைப்பட்டவையாகவும், பின் நிலத்திற்கும் வந்த உயிரினங்களின் தொடர்ச்சியான மரபியல் மற்றும் பரிணாம வளர்ச்சியே இன்று நாம் காணும் மனிதன் என்ற கருத்தை உணர்த்துவதாகவும் உள்ளது.

## பரிபாடலில் உயிர்மரபுக் கூறுகள்

சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் முல்லை நிலத் தெய்வமாக திருமால் குறிப்பிடப்படுகிறார். பரிபாடலில் காடும் காடு சார்ந்த நிலத்தின் தெய்வமான திருமாலின் பல்வேறு அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன.

அவதாரங்கள் பத்து எடுத்ததாக நாலாயிரம் திவ்விய பிரபந்தம் போன்ற வைணவ இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் பழம்பெரும் சங்க மேற்கணக்கு நூல்களில் ஒன்றான பரிபாடல் திருமாலின் அவதாரங்களை ஐந்து எனக் குறிப்பிடுகின்றது.

"திருமால் தச அவதாரங்கள் எடுத்ததாக நாலாயிரம் திவ்விய பிரபந்தம் உள்ளிட்ட வைணவ இலக்கியங்கள் குறிப்பிட்ட நிலையில், வராகம் (பரி. 4:22-24), நரசிங்கம் (பரி 4:19-21,) கண்ணன் (பரி. 3:83), கூர்மம் பரி (1:64-66), வாமணம் (பரி, 3:20) ஆகிய ஐந்து அவதரங்களை மட்டுமே எடுத்ததாகப் பரிபாடல் குறிப்பிடுகிறது" 1

பரிபாடல் குறிப்பிடும் இந்த ஐந்து அவதாரங்களும் உயிர் மரபியல் கூறுகளை உள்ளடக்கியதாக உள்ளது. நிரல்நிலைப்படி இந்த அவதாரங்கள்

1.கூர்ம அவதாரம 2. வராக அவதாரம் 3. நரசிங்க அவதாரம் 4. வாமன அவதாரம் 5. கண்ணன் அவதாரம் என அமைகின்றன.

## கூர்ம அவதாரம்

கூர்ம அவதாரம் பற்றி சங்க இலக்கியமான பரிபாடல் குறிப்பிட்டுள்ளது. நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் கூர்ம அவதாரத்தை இரண்டாவது அவதாரமாக குறிப்பிட்டுள்ளது. கூர்ம அவதாரம் என்பது ஆமை வடிவிலான திருமாலின் வடிவமாகும். புராணத்தகவலின்படி, தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தைச் கொணரும் பொருட்டு மத்தக மலையை மத்தாகவும் வாசுகி பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைய முற்பட்டனர். அப்போது மத்தக மலை கடலில் விழாதபடி இருக்க, மலையைத் தாங்கி அருள்புரிய திருமாலை வேண்டினர். தேவர் மற்றும் அசுரர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி திருமால் எடுத்த அவதாரமே கூர்ம அவதாரம் ஆகும்.

## வராக அவதாரம்

திருமாலின் அவதாரத்தில் இது மூன்றாவது அவதாரமாகக் குறிப்பிடப்படுகிறது. பூமியைக் கைப்பற்றிக் கடலுக்கடியில் எடுத்துச் சென்ற இரணியனின் தம்பி இரண்யாட்சன் என்ற அசுரனை வதைத்து பூமியை மீட்டத் திருமாலின் அவதாரம் இதுவாகும். வராக அவதாரம் என்பது பன்றி வடிவத்தைக் குறிக்கும்.

## நரசிங்க அவதாரம்

இது விஷ்ணுவின் நான்காம் அவதாரம் ஆகும். இந்த அவதாரம் மூன்று லோகங்களை (உலகங்களை வென்று அனைத்து உயிரினங்களையும் தன் பேராசையால் துன்புறுத்திய இரணியனை வதைத்து உலகங்களையும் உயிர்களையும் காக்க திருமால் எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம் ஆகும். இது இரணியன் மகன் பக்த பிரகலாதனை காக்க எடுத்த அவதாரம் என்றும் கூறுவர்.

## வாமன அவதாரம்

வாமன அவதாரம் என்பது மகாபலிச்சக்ரவர்த்தி என்ற மன்னனின் ஆணவத்தை அடக்குவதற்காக திருமால் எடுத்த அவதாரம். இது ஒரு குள்ள மனிதன் அவதாரம். இது திருமால் எடுத்த ஐந்தாம் அவதாரம் என்று கூறுவர். இவ்வவதாரத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் திருமால் மூன்றடி மண் கேட்டார் என்றும் இவ்வவதாரத்தைப் பற்றிக் கூறுவர்.

## கண்ணன் அவதாரம்

இந்த அவதாரம் திருமால் எடுத்த ஒன்பதாவது அவதாரம் என்று கூறுவர். இந்த அவதாரம் பரிபாடலில் ஐந்தாம் அவதாரமாக கூறப்படுகிறது. இந்த அவதாரம் சுயநலம் கொண்டு உயிர்களைத் துன்புறுத்திய கம்சனை வதைப்பதற்காக திருமால் எடுத்த அவதாரம். கண்ணன் அவதாரம்.

இவ்வாறு அவதாரங்களின் புராண செய்தி குறிப்பிடப்படுகிறது.

ஐந்து அவதாரங்களுடன் பல அவதாரங்கள் இணைத்து பாடப்பட்டும் இருக்கக்கூடும். எப்படி இருப்பினும் இந்த ஆதாரங்களின் வரிசை கிரமம் என்பது உயிர்மரபியல் அறிஞர்களின் கூற்றுப் படியே உள்ளது.

பரிப்பாடலின் பாடல்களின்படி திருமால் எடுத்த அவதாரம் என்பது முதலில் நீரிலிருந்து துவங்குகிறது. அது பரிபாடலின் கூற்றுப்படி கூர்ம அவதாரம் (ஆமை வடிவம்) ஆக இருந்தாலும் சரி நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் குறிப்பிட்ட முதல் அவதாரமான மச்ச (மீன்) அவதாரமாக இருந்தாலும் நீரிலிருந்தே முல்லை நில இறைவனான திருமாலின் அவதாரம் துவங்குகிறது. இதிலிருந்து உயிரின துவக்கம் நீர்தான் என்ற அறிவியலின் கூற்று சங்க இலக்கியமான பரிபாடலின் வழி மெய்ப்பிக்கப்படுகிறது. மேலும் பரிபாடல் குறிப்பிடும் இரண்டாவது அவதாரமான, வராக அவதாரம் (பன்றி) வடிவத்தைப் பற்றி குறிப்பிடுகிறது.

நீரிலிருந்து உருவான உயிரினங்கள், நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஆமை போன்ற உயிரினங்களாக மரபியலில் படிநிலைமாற்றம் கொண்டு தோன்றின. பின் நிலத்தில் மட்டும் வாழக்கூடிய உயிரினங்களாக மரபியல் ரீதியாக பரிணமித்தன என்பதன் அடையாளமாகவே பன்றி அவதாரத்தைக் கருதலாம்.

உயிர்மரபியலின்படி முதுகுநாண் உள்ள உயிரினங்கள் ஒன்றுடன் ஒன்று உயிரியல் அமைப்பு ரீதியாக தொடர்பு கொண்டவை என்றும், நீரிலிருந்தும், நீருக்கும் நிலத்திற்கும் இடைப்பட்டவையாகவும், பின் நிலத்திற்கும் வந்த உயிரினங்களின் தொடர்ச்சியான மரபியல் மற்றும் பரிணாம வளர்ச்சியே இன்று நாம் காணும் மனிதன் என்ற கருத்தை உணர்த்துவதாகவும் உள்ளது.

## நரசிங்க அவதாரமும் வரலாற்றுக்கு முந்தைய மனிதர்களும்

திருமாலின் அவதாரங்களில் மூன்றாம் அவதாரமான நரசிம்ம அவதாரம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அவதாரம் ஆகும், ஏனெனில் இதற்கு முன் திருமால் எடுத்ததாகக் குறிப்பிடப்படும் அவதாரங்கள் முழுமையான ஆமை (கூர்மம்), பன்றி (வராகம்) என்ற உயிரினங்களின் வழி அமைந்தது. ஆனால் மூன்றாவது அவதரமான நரசிம்ம அவதாரம் என்பது பாதி சிங்கம் பாதி மனித வடிவில் அமைந்த அவதாரம் ஆகும்.

பாதி விலங்கின் சாயலில் உள்ள மனிதர்களின் எச்சத்தை ஆப்பிரிக்காவில் கண்டறிந்து ஆய்வு செய்யும் அறிஞர்கள் தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையர் ‘ஹோமினின்’ என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் குறிப்பிடும் இவ்வகை மனிதர்கள் அதிக உயரமும், அதிகப்படியான கோரப்பற்களும், அதிக ரோமம் இவர்கள் உடலில் இருந்ததாகவும், இவர்கள் உடலில் வால் இருப்பதற்கான அடையாளம், நீண்ட நகங்கள் கொண்டவர்களாக இவர்கள் இருந்திருக்கலாம் என்றும் குறிக்கின்றனர். தற்கால அறிஞர்கள் கண்டறிந்துள்ள முற்கால மனிதனான ஹோமினினைத் தான் சங்க இலக்கியத் தமிழர்கள் நரசிம்ம அவதாரமாக உயிர்மரபு அறிவியலின் படிநிலையாக குறிப்பிட்டுள்ளனர் என்பதைத் தெளியலாம்.

இருவாழ்வியான ஆமை அவை அடுத்து நிலவாழ்வியான பன்றி அவதாரங்களை அடுத்து நரசிம்ம அவதாரத்தின் வடிவநிலை அதாவது மனிதனும் மிருகமும் கலந்த நிலை குறிப்பது, ‘மனிதன்’ என்பது பிறஉயிர்களின் உயிர்மரபு மற்றும் பரிணாமத்தால் வளர்ச்சி அடைந்த நிலை என்பதே ஆகும்.

பிற உயிர்களின் வளர்ச்சியே (உயிர்மரபு (ம) பரிணாமம்) மனிதன் என்பதை குறிக்கவே இரு அஃறிணை உயிர்கள் அடுத்து மனிதனும் மிருகமும் கலந்த நிலையாக நரசிம்ம அவதாரத்தை இனம் காணமுடிகிறது.

இதை மெய்ப்பிக்கும் விதமாக, இரண்டு அல்லது மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன், வாழ்ந்த மனிதனின் புகைப்படங்கள் முன்னோடி மனிதன் குறித்த ஆய்விற்காக நோபல் பரிசு வென்ற சுவீடன் நாட்டைச் சேர்ந்த மரபணுவியல் விஞ்ஞானி, சவான்டே பேப்லோ என்பவரால் வெளியிடப்பட்டுள்ளன.

“இரண்டு அல்லது மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன், தற்காலத்து மனிதன் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து உலகின் வேறு நாடுகளுக்குப் பயணம் செய்ததாக அறிவியல் கூறுகிறது. அன்று

உலகம் இருந்த நிலை தற்காலத்தை விட முற்றிலும் மாறாக இருந்தது, குறிப்பாக, இன்றைய மனிதனைத் தவிர வேறு சில 'மனிதர்கள்' வாழ்ந்ததாகக் கூறுகின்றனர்."2

முற்கால மனிதர்களின் மரபணுச் சோதனைகள் மூலம், தற்கால மனிதனின் மரபணு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் ஆய்வு மேற்கொண்டதற்காக சவாண்டே பேப்லோ அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரிசையில் குறிப்பிடப்படும் அடுத்த அவதாரம் குள்ளத் தன்மையுள்ள மனிதனாகவும் அதாவது வாமன அவதாரமாகவும், அடுத்து தற்கால மனித இனமான ஹோமோ சேப்பியன்ஸ் போன்று காணப்படும் கிருஷ்ண அவதாரம் எனவும் பரிபாடலில் குறிப்பிட்டுள்ளது.

## முடிவுரை

தற்கால உயிர்மரபுக் கருத்துக்களை தமிழ் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உயிர்மரபு குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. சங்க இலக்கியமான பரிபாடல் முல்லை நிலக் கடவுளான திருமாலின் அவதாரம் குறித்து கூறும் கருத்துகள், சங்க பழந்தமிழர்களின் உயிர்மரபு அறிவியலின் புரிந்துணர்வு மற்றும் கண்டுபிடிப்புகளின் புனைவாக பரிபாடலில் குறிப்பிடும் திருமால் அவதாரங்களை கருத முடிகிறது.

## குறிப்புகள்

சங்கப்பலகை, பரிப்பாடலில் திருமால் பெருமை வெளியீடு - தினமணி இணைய இதழ்

மோகன் சுந்தரராஜன், அறிவியல் ஒளி, ப.7.

## References


கு.வெ. பாலசுப்பிரமணியன், (2016) தமிழில் அகமும் புறமும், உமா நூல் வெயியீட்டகம், தஞ்சாவூர்

பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகள், (2019) நாலாயிரம் திவ்யப் பிரபந்தம் - பாகம் - 1, சென்னை பப்ளிக்கேசன்ஸ், சென்னை

க. மங்கையர்கரசி, பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள், லாவண்யா பதிப்பகம், சென்னை

ஆ. மணி, (2016) தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மரபும் திறனும், லாவண்யா பதிப்பகம், சென்னை



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License